CC.NO.145/2023

**1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. 317 குவிமுச பிரிவு மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அ.சா.1, வினோத் த/பெ.கண்ணதாசன், எம்.பி.எண்.27/2026, தேதி 21.01.2026 மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

புகார்தாரர் நாராயணன் என் தாத்தா என்றால் சரிதான். அ.சா.2 விக்னேஷ் என்பவரும் மேலப்பாளையத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். அவர் புகார்தாரார் நாராயணனுக்கு உறவினரா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக எவ்வளவு முறை காவல்நிலையம் சென்றுள்ளேன் என்றால் நிறையமுறை சென்றுள்ளேன். எனது தாத்தாவையும் அழைத்து சென்றுள்ளேன். போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் கூறியுள்ள விபரங்களையும், நீதிமன்றததில் சாட்சியமளித்த விபரங்களையும் போலீசாரிடம் எங்கு சென்று சொன்னேன் என்றால் கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் போலீசாரிடம் சொன்னேன்.

எதிரிகள் தாக்கிவிட்டார்கள் என்கிற விபரத்தை எனக்கு யார் சொன்னார்கள் என்றால் என் தாத்தா நாராயணன்தான் சொன்னார். என் தாத்தாவை மருத்துவமனைக்கு அழைத்து செல்லும்போது அவருடன் யார் இருந்தார்கள் என்றால் என் அம்மாச்சியும் உறவினர் கமலி என்பவரும் இதுபோன்று பிரச்சனை வரும் என்பதால் உடன் இருந்தார்கள். சம்பவத்திற்கு முன்னரே எதிரிகளுக்கும் என் தாத்தா நாராயணனுக்கும் சொத்து சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்ததா என்றால் சொத்து சம்பந்தமாக இல்லை, போகிய நிலம் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. நாராயணன் என்பவர் சம்பவ இடத்தின் போகியதாரர் என்றால் சரிதான். அந்த நிலத்தை 1ம் எதிரி சர்மிளா கிரயம் வாங்கியதால் ஏற்பட்ட பிரச்சனைதான் இது என்றால் சரிதான். 1ம் எதிரி

கிரயம் செய்த பின்னிட்டு சம்பவ இடத்திலிருந்து என் தாத்தா நாராயணன் என்பவரை காலி செய்ய சொன்னதால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட அடிதடி பிரச்சனை எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் தாத்தாவை காப்பாற்றுவதற்காக பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. (சாட்சி எதிரிகள் சம்பவ இடம் சென்று தீ வைத்ததும் சண்டை செய்ததும் குறித்து கமலியின் செல்போனில் கமலி பதிவு செய்து தனக்கு அனுப்பியதாக கூறுகிறார்). அதனை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால், சொன்னேன். போலீசார் அதனை கேட்டுக் கொண்டார்கள்.

<u>(நீதிமன்ற கேள்வி</u>

அதனை போலீசாரிடம் ஒப்படைக்கவில்லையா?.

<u>**பதில்**</u> இல்லை)

என்னிடமும் என் தாத்தா நாராயணன் என்பவரிடமும் அரசு மருத்துவமனையில் விசாரித்தன் அடிப்படையில்தான் இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். வேறு எங்கும் விசாரிக்கவில்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

**03.03.2026** **Page No. 101 /2024**

**CC.NO.145/2023**

**1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. 317 குவிமுச பிரிவு மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அ.சா.2, விக்னேஷ் த/பெ.குப்புசாமி, எம்.பி.எண்.27/2026, தேதி 21.01.2026 மனு உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் புகார்தாரர் நாராயணன், மற்றும் எதிரிகள் ஆகியோர் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நாராயணன் எனக்கு உறவினர் அல்ல. ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். பார்வை மகசரில் என்னுடன் கையொப்பம் செய்தவர் பெயர் ஞாபகமில்லை. இருவரும் ஒரே இடத்தில் கையொப்பம் செய்தோமா என்றால் நான் தனியாக செய்தேன். அவர் எப்போது கையொப்பம் செய்தார் என்று ஞாபகமில்லை. என்னுடன் கையொப்பம் செய்த மற்றொரு சாட்சி நான் கையொப்பம் செய்தபோது உடனிருந்தாரா என்றால் ஞாபகமில்லை. நான் காவல்நிலையம் சென்றேனா என்றால் இல்லை.

புகார்தாரர் நாராயணன் என் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பார்வை மகசரில் கையொப்பம் செய்துள்ளேன் என்றும் நான் குறிப்பிடும் சமயம் நான் அங்கு இல்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**